# In the Court of the District Munsif, Eraniel

Original Suit No.42/ 2023 Date:30.08.2024

(P.W.2)- இயேசு பாலன்

**குறுக்கு விசாரணை**

நான் எந்த காலகட்டத்தில் மணவாளக்குறிச்சி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்தேன் என்றால் 08.12.2021-லிருந்து 30.04.2024 வரை பணிபுரிந்தேன். நிலவரி ரசீதுகளை(வா.சா.ஆ.6) நாங்கள் கொடுக்கமாட்டோம் என்று சொன்னால் சரிதான். வாதி வசித்து வருவதாக கூறும் வீடு கடலிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்குமென்றால் தெரியாது. வழக்கு சொத்து குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். மேலும் அதுசம்பந்தப்பட்ட ஆவணங்களை பார்த்தாலும் அதற்காக விளக்கங்களை என்னால் கூற முடியாது என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை**

நான் முதலில் இந்நீதிமன்றத்திற்கு வரும்போது செயல் அலுவலர் பணியிலிருந்தபோது சாட்சியம் அளித்தேன். தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். தற்போது எனக்கு வந்த அழைப்பாணை பஞ்சாயத்து செயல் அலுவலர் என்ற பதவியில் அனுப்பப்பட்டிருந்தது. என்னுடைய பெயருக்கு அழைப்பு வரவில்லை. இந்த அழைப்பாணை குறித்து எனது அலுவலகத்திலிருந்து தெரியபடுத்தினார்கள். நான் தனிப்பட்ட முறையில் சாட்சியம் அளிக்க வரவில்லை. பிரதிவாதியிடம் சுவாதினம் எதுவும் பெறவில்லை.

ஒப்பம்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல் (பொறுப்பு)